"... கண்விழிப்பது விவர்த்தும்" ... 1876

சத்திய வேத பாது

# காவலன்

தந்தி: "கதலிக்பிறஸ்" யாழ்ப்பாணம்.
தொலைபேசி: 300
REGISTERED AT THE CEYLON G.P.O. AS A NEWSPAPER

89-ம் புத். ‖ யாழ்ப்பாணம், 1964-ம் ஆண்டு கார்த்திகைமீ 7-ந்உ சனிக்கிழமை — பிரதிசதம் 15 ‖ 44-ம் இல.

ஞானோபதேச நடுநிலையம்,
மேற்றிராசன இல்லம், யாழ்ப்பாணம்.

ஞானோபதேச கருத்தரங்கு

● ஊர்காவற்றுறை

நிகழிடம்: சென் அன்ரனிஸ் கல்லூரி.
நாள்: 15-11-64 ஞாயிறுவாரம்.
காலம்: 8-45 மணி.

கருத்தரங்கில் கலந்துகொள்பவர்கள் தொகையை அவ்வப்பகுதியினர் தாமதமின்றி ஞானோபதேச நடுநிலையத்துக்கு அறிவிக்கவும்.

* * *

தோழன் கார்த்திகை இதழ்
வெளிவந்துவிட்டது
உங்கள் பிரதிக்கு முந்துங்கள்

நிர்வாகி.

## இயற்கை அன்னையின்

# இணையற்ற நகரம்

கவிஞர்களின் கற்பனையிலே
கற்பகச் சோலை ஒத்த
கனிவான கோவை நகரில்
ஆயத்தம் — பரபரப்பு.

— இந்தியா

உலக சற்பிரசாத மகாநாட்டின் பொழுது, கோவைநகரில் இந்திய அப்போஸ்தலர் அர்ச். பிரான்சீஸ் சவேரியாரின் திரு உடல் காட்சிக்கு வைக்கப்படும். உலகம்எங்கிருந்தும் யாத்திரிகர்களாகவந்து குவியவிருக்கும் மக்கள் இவ்வருடம் கார்த்திகை 24-ம் திகதி தொடக்கம் அடுத்தவருடம் தை 6-ம் திகதிமட்டும் அர்ச்சியசிஷ்டரின் அழியாத திருஉடலைக்கண்டு வணங்கலாம்.

பழுதடைந்து பாழடைந்து, பழமையின் சின்னங்களாகக் கிடக்கும் ஆலயங்களும் சந்நியாச மடங்களும் திருத்தப்படுகின்றன. இவ்வேலைக்கு 132. 500 ஸ்ரேளிங் பவுண் இந்திய அரசாங்கத்தால் உத்தியோக பூர்வமாக ஒதுக்கப்பட்டிருக்கிறது.

1522-ல் அர்ச். சவேரியார் கோவை மண்ணில் கால் எடுத்து வைத்தார். தம்முடைய அயரா உழைப்பிற்கும், ஆர்வமுள்ள அப்போஸ்தலத்துவத்துக்கும் அப் புண்ணியநகரை மத்திய இடமாக்கினர்.

முன்னொருகாலம் கோவை நகரம் செழிப்பான இடமாக இருந்து வந்தது. ஆனல், பதினெட்டாம் நூற்றுண்டில் ஏற்பட்ட கொள்ளை நோய்களினுல் பலர் அந்நகரை விட்டு நிரந்தரமாய் வெளிஏறினர். அங்கு தற்போது வசித்துவரும் 600 000 சனத்தொகையில் அதிகமானோர் இந்துக்கள்.

## அமெரிக்க தலைவருக்குப் பாப்பரசர் தந்தி

4—ம் திகதி புதன்கிழமை நடந்த ஐக்கியஅமெரிக்க தேர்தலில் அமோக வெற்றிபெற்றூர் ஜனுதிபதி ஜோன்ஸன். நமது பரிசுத்ததந்தை அவரைப் பாராட்டி வத்திக்கானில் இருந்து தந்தி ஒன்று அனுப்பினுர்.

வெற்றிபெற்ற ஜனுதிபதி கூறியது போல் உலக ஐக்கியத்திற்காகவே அமெரிக்க சரித்திரத்தில் முன்பின் காணுத அதிக வாக்குகளைப் பெற்றூர். அனைத்துலகிலும் படிப்படியாக சர்வதேச ஐக்கியம் வளர்ந்து வருகிறது, இதற்கு அமெரிக்கமக்கள் தேர்தலில் உலகறிய முரசொலித்திருக்கிறூர்கள்.

ஜனுதிபதி ஜோன்ஸன் வெற்றி குறித்து பாரதப்பிரதமர் சாஸ்திரி கூறியதுபோல் சமாதானம், சகவாழ்வு, படைக்குறைப்பு ஆகியவை புதிய பலம்பெற்றுள்ளதென்பதற்கு அமெரிக்கமக்கள் தீர்ப்புக்கூறி விட்டார்கள்.

பிளவுபட்டுக் கொண்டிருந்த உலகில் மனிதப் பண்புள்ள ஐக்கியம் வளர்ந்துகொண்டு வருவது இறைவனின்செயல். அமெரிக்கமக்களோடு முழுஉலகமும் முழுமுதற் கடவுளுக்கு நன்றி கூறவேண்டியது.

[ தொடர்ச்சி 5-ம் பக்கம் ]

வத்திக்கான் சங்கத்தின் இவ்வருட முடிவுதினம் கார்த்திகை 21-ந் திகதியாகும். 4-வது வருட கூட்டங்களின் ஆரம்பதினம் பின் அறிவிக்கப்படும் எனச் சென்றவாரம் சங்கபிதாக்களுக்குத் தெரிவிக்கப்பட்டது.

## வத்திக்கான் தந்தி

மார்கழி 3-ந் திகதிமாத்திரம் பாப்பரசர் பம்பாயில் தங்கியிருப்பார். பாப்பரசருடைய விசேஷ வணக்கத்திற்காக அர்ச். சவேரியாருடைய புனிதஉடல் கோவையிலிருந்து பம்பாய்க்குக்கொண்டு வரப்படும்.

"பறக்கும் பாப்பரசர்" ஆருவது சின்னப்பதந்தை பம்பாய் நகருக்குப் பயணம் வருவது— திருச்சபையின் 2,000 வருட சரித்திரத்தில் ஒரு பாப்பரசர் செய்யும் மிகவும் நீண்ட பிரயாணமாகஇருக்கும். ஐரோப்பாவுக்கும், மத்திய தரை நாடுகளுக்கும் வெளியே பயணம் செய்வது சரித்திரத்தில் இது தான் முதல் தடவை.

சின்னப்ப பாப்பரசர் இவ்வருடத் தொடக்கத்தில் பலஸ்தீனுவுக்குப் போயிருந்தபொழுது, 150 ஆண்டுகளாக எந்தப் பாப்பரசரும் இத்தாலிய தேசத்தைவிட்டு வெளியே செல்லாத ஒருவழக்கத்தை மாற்றினுர். இதன் காரணமாகவேதான் "பறக்கும் பாப்பரசர்" என்ற கருத்தாழமுள்ள பட்டத்தையும் பெற்றுக்கொண்டு, "நடமாடும் அப்போஸ்தலர்" என்று தம்மை அழைப்பதிலும் இன்பம் காணுகிறூர். சற்பிரசாத மகாநாட்டின் போது அவர் செய்யவிருக்கும் (போக-வர) 7,698 மைல் விமானப் பிரயாணம் சரித்திரத்தில் அழியா இடத்தைப் பெறப்போகிறது.

263 பாப்பரசருள், ஒருசிலரே தான் இத்தாலியைவிட்டு வெளியே சென்றிருக்கின்றனர். சிலர் தங்கள் விருப்பத்திற்கு மாறுகவே போக வேண்டிய நிலையிலும் வைக்கப்பட்டனர்.

முதலாவது பாப்பரசர் பேதுரு. தம்முடைய வாழ்வின் பெரும் பாகத்தை, பரன்பிறந்த பலஸ்தீனத்திலேயே கழித்தார். கடைசி நாட்களில்மாத்திரம் உரோமைக்கு வந்து, வேதசாட்சியாக இறந்தார். திருச்சபை வரலாற்றுத் தொடக்கத்தில் நாடுகடத்தப்பட்ட பாப்பரசர்கள் மத்தியதரைத் தேசங்களிலேயே சரண்புகுந்தனர்.

14-ம் நூற்றுண்டில் பிரான்சில் உள்ள அவிஞ்ஞோன் என்ற இடத்தில் ஆட்சிபுரிந்தனர். சின்னப்ப தந்தைக்குமுன்பு இத்தாலியதேசத்தைவிட்டு வெளியே பயணம்செய்த பாப்பரசர் 7-ம் பத்திநாதர். 1804-ம்ஆண்டு நெப்போலியனுக்குப் பட்டாபிஷேகம் அளிப்பதற்கு அழைக்கப்பட்டார். 1870-ல் இத்தாலியபடைகள் உரோமைநகரைக் கைப்பற்றியபோது, "வத்திக்கான் கைதிகள்" என்று பாப்பரசர்களை அழைத்தகாலம் தோன்றியது. அன்றிருந்து, அருளப்ப தந்தையின் ஆட்சிக்காலம் வரை 108 ஏக்கர் உள்ள சிறிய வத்திக்கான் இராச்சியத்தைவிட்டு எந்தப் பாப்பரசரும் வெளியே நடமாடவில்லை.

— உரோமை

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## தினசரி பூசை வழிகாட்டி

**கார்த்திகை மாதம்—1964.**

| | | | |
|---|---|---|---|
| 8 | ஞா. | பெந்தக்கோஸ்துவுக்குப் பின் 25-ம் ஞாயிறு | [ப] |
| 9 | தி. | அர்ச். தியடோர் | [வெ] |
| 10 | செ. | அர்ச். அவலின் பெலவேந்திரர் | [வெ] |
| 11 | பு | அர்ச். மற்றீன் | [வெ] |
| 12 | வி. | அர்ச். மற்றீன் I | [சி] |
| 13 | வெ. | அர்ச். திதாக்கியார் | [வெ] |
| 14 | ச. | அர்ச். யோசேபாத்து. | [சி] |


# சத்தியவேத பாதுகாவலன்

1964-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ந் திகதி


## தெய்வீக விருந்து

ஆயத்தம் செய்தோம்! எதிர்பார்த்திருந்தோம்! அந்தநாள் அண்மி விட்டது. இந்தமாத இறுதியில், பம்பாய் என்ற புண்ணிய நகரில், சற்பிரசாத மகாநாடு தொடங்கும். சரித்திரத்தில் அழியாத சம்பவங்கள்பல அங்கு நடக்கவிருக்கின்றன. பரிசுத்த தந்தையின் இந்திய பயணமும் அதில் ஒன்று. இவை அத்தனையும், சற்பிரசாத மகாநாட்டின் முக்கிய நோக்கத்தை மறைத்துவிடக்கூடாது. சற்பிர சாதத்தில் எழுந்தருளியிருக்கும் கடவுளை வணங்க— வாழ்த்த— இன்னும் அதிகம்அவரை அறியவைக்க—இன்னும் அதிகம் அவரை அன்பு செய்யப்படவைக்க – இவைதான் மாநாட்டின் நோக்கம்.

சற்றுச் சிந்திப்போம்! வட்டவடிவமான சற்பிரசாதம்மூலம் கடவுள் எமக்குள் – எமது மத்தியில் வாழ்கின்றார். அந்த அப்பத் தின் தோற்றத்தில் அவருடைய உடலும், உயிரும், ஆன்மாவும் தெய்வீகமும் இருக்கின்றன. ஏன்? அவரை நாம் ஆராதிக்க— அன்பு செய்ய—எமது ஆன்மாவிற்கு விருந்தாகப் பெற்றுக்கொள்ள. உணவு விருந்தாகிய சற்பிரசாதத்தில் ஏன் நாம் கலந்து கொள்ள வேண்டும்? அதனால் விளையும் நன்மைகள் எவை?

இந்த விருந்தில் கலந்து கொள்வதால் இரட்சகராக கிறீஸ்து நாதருடன் ஒன்றித்துக் கொள்ளுகிறோம். மொட்டுக்கும், செடிக் கும் உள்ள உறவைக் காட்டிலும், கருவில் உள்ள குழந்தைக்கும் அதன் தாய்க்கும் உள்ள ஒற்றுமையைக் காட்டிலும், மேலான ஒற்றுமை சற்பிரசாதம்பெறும் ஆன்மாவிற்கும், கிறீஸ்துநாதருக்கும் இடையில் உருவாகிறது. கடவுள் அருள் பெருகுகிறது; அவர் எம்மில் வைத்திருக்கும் அன்பு வளருகிறது; அவருடைய கண் களுக்கு நாமும், அன்பு செய்யப்படத் தகுதிஉள்ளவர்களாக மாறு கிறோம். சற்பிரசாதம் உட்கொண்டபின் வரும் சிலநிமிடங்கள் எமது வாழ்வின் விலையற்ற, ஒப்பற்ற நேரமாக விளங்கவேண்டும். கடவுள் எமக்குமுன்பாக மாத்திரமல்ல; எமக்குள்ளேயே இருக்கிறார்.

சாதாரண உணவு, உடல்நலம் அளிக்கிறது; திடம் தரு கிறது. அதேபோல, சற்பிரசாதமும் எமது ஆன்மாவிற்கு உரம் தருகிறது. சோதனைகளில் வெற்றிபெற, கரடுமுரடான எமது வாழ்விலே கிறீஸ்தவ பண்புடன் ஒழுக, தின்மையைக் கூர்ந்துநோக் கும் திறன்பெற எமக்கு உதவிசெய்கிறது.

அடிக்கடி திவ்விய நற்கருணை பெறுவது, நித்திய வாழ்வைத் திடமாக அடைவதற்கு ஒரு வாக்குறுதி. சற்பிரசாதத்துடன் இணைந்து வாழ்பவர்கள், கடவுளிடமிருந்து பிரிந்தோ, அகன்றோ வாழவும் முடியாது; இறக்கவும் முடியாது.

எத்தனையோ தடவை, நற்கருணையைப் பெற்றிருந்தும் எமது வாழ்வில் எவ்வித முன்னேற்றத்தையும் காணவில்லை என்றால், மனச்சாட்சியைத் தட்டிக் கேட்கவேண்டிய ஒரு கருமம். நாங்கள் சற்பிரசாதம் பெறப்போகும்போது எந்தநோக்கம் மனதில் ஊசலாடு கிறது? அதை எப்படிப் பெற்றுக் கொள்ளுகிறோம்? சிந்திக்காமல் செய்யும் பழக்க வழக்கங்களில் ஒன்றா? நன்றாக ஆயத்தப்படுத்து கின்றோமா?

பம்பாய் நகருக்கு எமக்குள்ளே வெகு சிலர்தான் யாத்திரை போவார்கள்! அங்கு போகாதுவிட்டாலும், வரலாற்றுச் சம்பவ மகாநாடு, எமது ஞானவாழ்வில் அழியாத ஒரு முத்திரையைப் பதித்தாக வேண்டும். நற்கருணையைப் பொறுத்தமட்டில் நாம் கொண்டுள்ள மனப்போக்கைச் பரிசோதிக்க இது ஓர் அரிய சந்தர்ப்பம்! கிறீஸ்துநாதரை, இன்னும் அதிகம் அறியவைக்க, அன்பு செய்யப்பட வைக்கத் திட்டங்கள்தீட்ட ஓர் அரியவாய்ப்பு! நற்கருணையைக் கூடியபக்தியுடன் பெற்றுக்கொள்ள — அடிக்கடி பெற்றுக்கொள்ள — நற்கருணைப் பக்தியைப்பரப்ப — இதோ ஒரு தருணம். அருளின் காலம் இது! ஆதலால், தவறவிடக்கூடாது!

பம்பாய் சற்பிரசாத மாநாட்டிற்கெனத் தயாரித்த ஞானப் பூச்செண்டை நயவுசெய்து உடனடியாக வண. காரியதரிசி சுவாமிகள். மேற்றிராசன இல்லம், யாழ்ப்பா ணம் என்ற முகவரிக்கு அனுப்பிவைக்கவும்.



● ஞாயிறு சிந்தனை

## இஸ்பிரீத்துசாந்து திருநாளின்பின் 25-ம் ஞாயிறு

"பரலோக இராச்சியமானது தன் வயலில் நல்ல விதையை விதைத்த மனுஷனுக்கு ஒப்பாயிருக்கின்றது. ஆனால், ஆட்கள் நித்திரை செய்கையில் அவனுடைய மாற்றான்வந்து கோதுமை நடுவில் தகரைகளை விதைத்துவிட்டுப் போனான். (சுவிசேஷம்)

தீமை எனும் பிரச்சனைபற்றி நாம் ஆச்சரியப்படலாம். ஏன் இறைவன் அதை அனுமதித்தார் என அங்க லாய்க்கலாம். தீயவர்களை ஏன் அவர் அப்புறப்படுத்தவில்லை? தீயசூழல்கள் மற்றவர்களைக் கெடுக்குமுன் ஏன் அவர் அவற்றை அகற்றவில்லை? இப் படியாகக் கிறிஸ்தவ வாழ்வை ஏன் அவர் கடினமாக்குகின்றார் என்று நாம் வியப்புறலாம். இதுவோர் ஆழ்ந்த பரமரகசியம். நாம் இறைவனடி சேர்ந்தபின்தான் அதை நாம் முற்று கப் புரிந்துகொள்வோம். அதுமட்டும் இன்று சுவிசேஷத்தில் கிறிஸ்துநாதர் தரும்பதிலுடன் நாம் திருப்தியடைய வேண்டும். "இரண்டையும் (தகரை களையும், கோதுமையையும்) அறுப் புக்காலம் வரையில் வளரவிடுங்கள். அறுப்புக்காலத்தில் நான் அறுப்புக் காரரைப் பார்த்து: முதற்தகரைகளைச் சேர்த்து அவைகளைச் சுட்டெரிக்கும் படி கட்டுகளாகக் கட்டுங்கள்; கோது மையையோ, என் களஞ்சியத்தில் சேர்த்து வையுங்கள் என்பேன்."

பாவத்தையும், அக்கிரமத்தையும் நாம் பார்க்கையில் நாம் கடவுளைவிட அதிக கண்டிப்பாய் இருக்க விரும்பு வோம். ஆனால், அது பெருந்தவறு. பாவிகளின்மேல் நாம் இரங்க வேண்டும். எமது செபத்தாலும் பரித்தியாகங்களினாலும் அவர்கள் மனமாற அன்புடன் உதவவேண்டும். உன்னத கடவுளின் பொறுமையை யும், சகிப்புத் தன்மையையும் நாம் பின்பற்ற வேண்டும். ஆனால், நாம் தீமையை வளரவிட வேண்டுமென்று கிறீஸ்துநாதர் சொல்லவில்லை. உலகில் உள்ள தீமையைக்கண்டு நாம் அளவுக்குமிஞ்சி அங்கலாய்ப்புக் கொள்ளக்கூடாது; அதனால் நாம் மனந்தளர்ந்துபோகக் கூடாதென்று தான் அவர் கூறுகின்றார். எனவே, நாம் எமது வாழ்வில் தீமை புகா வண்ணம் கவனமாக இருக்கவேண்டும். ஆட்கள் நித்திரைசெய்யும்போதுதான் மாற்றான்வந்து தகரைகளை விதைத் தான். ஆகவே, நாம் எப்பொழுதும் விழிப்பாயிருக்கவேண்டும். கிறிஸ்து நாதரின் வாக்கியத்தின்படி நடக்க முயற்சிக்கவேண்டும். எமது முன்மா திரிகையான வாழ்வினால் எமது சூழலில் தீமை வளராது தடுக்க வேண்டும்.

இவ்வளவு காலமும் நாம் தீமையின் மட்டில் எவ்வாறு நடந்துகொண் டோம்? எம்முள்ளத்தில் தீமை வேரூன்றவிட்டோமா? அல்லது கிறிஸ்துவின் வாக்கியமான நல்லவிதை வேரூன்ற விட்டோமா? எமது நல் வாழ்வினால் எமது சூழலில் தீமை வளராது தடைசெய்கின்றோமா? இவைகளே இவ்வாரம் நாம் விடை காணவேண்டிய வினாக்கள்.

இ. மரியவளன்.

உருளும் உலகிலே  திருச்சபை

இந்தியா

## ● மாநாட்டில் இந்தியதலைவர்

மகாநாட்டின் திறப்பு விழாவில் இந்திய குடியரசுத் தலைவர் டாக்டர் ராதா கிருஷ்ணன் அவர்கள் கலந்துகொள்வதுடன் "அன்பு வாழ்வு" என் பதுபற்றி உரையாற்றவும் இசைந்துள்ளார். இந்திய கர்தினால் ஆண்டவர் அவர்கள் அண்மையில் டில்லிசென்றிருந்தபோது அன்னாரைச் சந்தித்துப் பேசினார். ஆழ்ந்த அறிவு, ஆங்கில மொழியில் சொல்வளம், நிறைந்த புலமை, திருத்தமுற உரையாற்றும் திறமை ஆகியவற்றை ஒருங்கே பெற்றுள்ள குடியரசுத் தலைவரின் பேச்சு, மகாநாடு செல்வோருக்கு அரிய விருந்தாக அமையும் என்று எதிர்பார்க்கலாம்.

## ● இசைத்தட்டில் மகாநாடு

மகாநாட்டில் இசைக்கப்பெறும் பாடல்கள் எல்லாம் இசைத்தட் டுக்களாகிவிட்டன. இவையெல்லாம் விற்பனைக்கும் வெளியாகிவிட்டன. மாநாட்டு அலுவலகமே இவைகளை விநியோகம் செய்கின்றது.

லண்டன்

## ● நிலத்தின்கீழ் தேவாலயம்

லண்டன் விமான நிலையத்தின்கீழ் ஒரு தேவாலயம் கட்டப்பட விருக்கிறது. மூன்று செபபீடங்களைக் கொண்டதாக இருக்கும். றோமன் கத்தோலிக்கரும், அங்கிளிக்கன் சபையும், சுதந்திர திருச்சபை களும் விமானநிலையத்தில் வந்துபோகும் தத்தம் மதத்தினருக்கு வழி பாடு வசதிகள் செய்யவிருக்கின்றனர். இம்மூவித சபைகளும் கூட்ட மாக இணைந்தே இத்தேவாலயத்தைக் கட்ட முற்பட்டிருக்கின்றனர். நிலத்தின்கீழ் கட்டப்படவிருக்கும் இத்தேவாலயத்தின் முக்கிய அசா தாரண அம்சம், விமான நிலைய மாற்றங்கள், கட்டிட அமைப்புகளுக்காக இக்கட்டிடம் அமைக்கப்பட அல்லது அழிக்கப்படத் தேவையில்லை. சுமார் 100 முதல் 200 பேரைக்கொள்ளக்கூடிய இத்தேவாலயம் விமான நிலையத்தைநாளாந்தம்பாவிக்கும் 40,000மக்களின் வழிபாட்டுக்கு உதவும்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org




**அன்பார்ந்த தம்பி, தங்கையர்களே உங்களுக்கு என் அன்புகனிந்த வணக்கம்!**

ரோமாபுரியின் மத்தியில் நீரோசக்கிரவர்த்தி சொர்ணமயமான ஒரு மாளிகையைக் கட்டுவித்திருந்தான். அது எண்பது ஏக்கர் நிலத்தை அடக்கியது. மாளிகையின் நடுவில் பொன்னாலும், வெள்ளியாலும் அமைக்கப்பட்ட 120 அடி உயரமுள்ள நீரோவின் சிலை ஒன்று ஸ்தாபிக்கப்பட்டிருந்தது. மாளிகையின் உட்பாகம் முழுவதும் முத்துக்களாலும் நிறச்சிப்பிகளாலும் பதிக்கப்பட்டிருந்தது. மாளிகையின் ஸ்நான அறையிலே ஒரு பட்சியின் சொண்டின் வழியால் கடல்நீர் பாய்ந்துகொண்டிருந்தது. இன்னொரு ஸ்நான அறையில் வேறு ஒரு பட்சியின் சொண்டிலிருந்து அல்புலா நகரத்துக் கெந்தக ஊற்றுநீர் பாய்ந்துகொண்டிருந்தது. அசனசாலையின் வில்லுகளில் கம்பளித் திரைகள் தொங்கிக்கொண்டிருந்தன. புதுப்புதுப் போசனம் பரிமாறும் ஒவ்வொரு விசையும் அத்திரைகள் மாற்றப்பட்டன. தந்தப் பாத்திரங்கள் புஷ்பமாரி சொரிந்துகொண்டிருந்தன. பூ விசிறிக் குழல்கள் வாசனைத்திரவியங்களை வீசிக்கொண்டிருந்தன. நீரோ ஒரே ஆடையை ஒருபோதும் இருவிசை அணிவதில்லை. தூமிரங்களினால் தாங்கப்பட்ட பொன்மயமான வலைகளால் மீன்பிடித்து விளையாடுவான். அவனுடைய மாளிகைக் கோணங்கிகளின் முகமூடியும், செங்கோலும், முத்துக்கள் நிரம்பப் பதிக்கப்பட்டிருந்தன. மரகத மாணிக்கச் சட்டங்களில் தொங்கிய நிலைக்கண்ணாடியில் நீரோ தன்னுடைய அழகை ரசிப்பான். போசன பாத்திரங்களில் ஒன்று நானூறு தலேந்து, அதாவது இருபதுலட்சம் ரூபா பெறுமதியானது.

அதுவே நீரோவின் சொர்ணமயமான மாளிகையாம். இப்படிப்பட்ட ஒரு மாளிகையில் சிலகாலம் வசித்தபின், நித்திய அக்கினிச் சூளையுள் ஒருநாள் இறங்கவேண்டியிருப்பின் அந்த மாளிகையில் வசித்ததினால் உண்டாகும் பயன் யாது? "தங்களுடைய மாளிகைகள் நித்தியமானவை என எண்ணுகிறார்கள். ஆனால், மகிமைப்பிரதாபத்தின் மத்தியில் மனுஷன் திடீரென மறைந்துபோவான்" (சங். 49). இஷ்டப்பிரசாதம் என்ற ஒரேயொரு பொக்ஷமே எங்களுக்குத் திருப்திதரும். ஒருவன் இஷ்டப்பிரசாத அந்தஸ்தில் மரிக்காவிட்டால் "அவன் உலகம் முழுவதையும் ஆதாயம் பண்ணினாலும் அவனுக்கு இலாபமென்ன?"

—அண்ணா.

# கண்ணின் மணிகளா?

பெறும் அவற்றுள் யாம் அறிவதில்லை அறிவு அறிந்த மக்கட்பேறு அல்ல பிற.

ஒருத்திபெறும் செல்வங்களுள் அறிய வேண்டுவனவற்றை அறிதற்குரிய மக்களைப் பெறுதல் அல்லாது பிறசெல்வங்களை யாம் மதிப்பதில்லைஎன்கிறார் திருவள்ளுவர். மெய்தான்; முக்டுமுட்டப் பொன்னைக் குவித்தேன்? பொருள் பண்டங்களைத் தேடியேன்? அம்மா பாச்சி, சோச்சி என்றுசொல்ல ஒரு குழந்தையில்லாதவீடு ஒருகாடுதானே. ஆண்டவன் அருளால் நமக்குஒரு குழந்தை கிடைத்துவிட்டால் போதுமா? நற்குண நற்செய்கை உடையவனாய், அறிவுஒழுக்கங்களிற் சிறந்தவனாய், பெரியோராற் போற்றப்படுபவனாய், ஆசிரியாற் புகழப்படுபவனாய் வளர்ந்தால் அல்லவோ பெற்றவயிறு பூரிக்கும்; மனம்குளிரும். அவனை ஒழுக்கத்திற் பழக்குவது பெற்றோர் கடன். அதிலும் விசேஷமாய் தாய் மாராகிய நம்தலையிலேயே சுமத்திய கடன்.

ஒரு குடும்பம் ஒரு கலாசாலை. ஒருநாடு சீராய் நடைபெற்று நிலைபெற ஒழுங்கு அல்லது சட்டம், அதிகாரம், அமைச்சல் அவசியம். வானுலகில் கோடானுகோடி நட்சத்திரங்களும், கிரகங்களும் ஒன்றோடொன்று மோதாமலும், தத்தம் பாதையைவிட்டு விலகாமலும், சுழற்சியில் சுணங்காமலும் சூரியனால் ஆளப்பட்டுவருகின்றன. பூவுலகிலும் ஒழுங்கின்றி ஒன்றுமே சீராய் நடைபெறமுடியாது எனவே, கலாசாலையிலும் பலபலஒழுங்குகள் அமைக்கப்பட்டிருக்கின்றன. அவை கலாசாலை அனுகூலம் அடைவதற்கும் மாணக்கர் எந்த அந்தஸ்திலும் அபிவிருத்தி அடைவதற்கும் அகத்தியம் வேண்டியவை. ஒழுங்குகளை அனுசரிக்கச்செய்ய அதிகாரம் வேண்டும். எந்த அதிகாரமும் கடவுளாலேயே கொடுக்கப்படுகின்றது. அதிகாரத்துக்கு அமைதல் அடிமைத்தனம் அல்ல; ஆண்டவனுக்கு வணக்கம் செலுத்துவதேயாகும். கிறீஸ்துநாதர் பூவில் அனுசரித்த சகல புண்ணியங்களுள்ளும் அமைச்சலே எங்கும் எப்பொழுதும், நசரேத்திலும் கல்வாரிக்குன்றிலும் வெளிப்படையாய் விளங்குவதைக் காண்கிறோம். "அவர் சிலுவை மரண மட்டும் கீழ்ப்படிந்தார்."

ஒவ்வொரு மாணவனும் சந்தோஷமும், சமாதானமும், சுகதேகமும் உள்ளவனாகவும், ஆசிரியர்மட்டில் மரியாதை, அமைச்சல், நேசம், நன்றி உள்ளவனாகவும், படிப்பில் ஊக்கமும், பரீட்சையில் தேர்ச்சியும், வாழ்க்கையிற் சீரும்சிறப்பும் உடையவனாகவும் இவற்றிற்கெல்லாம் கொடுமுடியாய்ச் சீரிய ஒழுக்கத்திற் திளைத்து, சான்றோனாக வேண்டுமென்பதே ஒவ்வொரு ஆசிரியரதும் தணியாத பேராசை. தாம் கல்விபயிலும் கலாசாலைமாணவர் பரீட்சைத்தேர்வில், பேச்சுப்போட்டியில், விளையாட்டுப் போட்டியில், நாடகக் கலையில், சங்கீதஞானத்தில், ஒழுக்கத்தில், வேதஅனுசாரத்தில் மற்றெந்தப் பாடசாலைக்கும்பின்நில்லாது முதலிடம் பெற வேண்டுமென்று சதா சிந்தனையோடிருப்பதை அவரிடம் கலைபயிலும் மாணவர் அறிவர்.

இங்ஙனம் இருக்க, முகம் வடிவில்லாவிடில் கண்ணாடியைக் குறைகூறலாமா? மாணவர் தகுதியில்லாவிடில் ஆசிரியர் என்செய்வர்? உள்ளதை உள்ளபடி சொல்லுவர். அதற்காக ஆசிரியரில் குறைகாண்பது அல்லது அவரைத் தூஷிப்பது சரியா? எய்தவன் இருக்க அம்பை நோவதேன்? பிழையெல்லாம் நம்மதே; நாமேகுற்றவாளிகள். பிள்ளைகட்குக் கடவுள்பக்தியையும், சன்மார்க்கத்தையும் பயிற்ற வேண்டியவர்கள் குருமாரும், உபாத்திமாரும்தான்எனச் சாக்குப்போக்குச்

(தொடர்ச்சி 4-ம்பக்கம்)

# சிகப்பு விளக்கு

சிவப்புவிளக்கு. என்ன! அபாயக் குறியாயிற்றே? இல்லை, அமைதி அங்கே. அச்சம்! இல்லை, அன்பு தவழ்ந்து விளையாடுகிறது அங்கே. துக்கம்! இல்லை, தூய்மை நிலவுகிறது: இடர்விளைகிறது! இல்லை, இன்பம் பொங்குகிறது. ஆ, தனிமை! இல்லை, அதிலும் ஓர் இனிமை.

ஆம், அணையா விளக்கருகில் துணை யாரும்இல்லை. அமலனின் இருக்கையை இவ்வுலகில் காட்டிநிற்கிறது சிவப்புவிளக்கு. எங்கே? ஆலயமத்தியில் அழகுறக் காட்சிதரும் பீடத்தில் தான்: இந்தச் சிவப்பு விளக்கையே புகலிடமாகக்கொண்ட புனிதர்கள் எத்தனைபேர்? இவ்விளக்கிலே தம் அகத்தைத் தூய்மைப்படுத்தி அமலனுடன் அன்புறவுகொண்டோர் எத்தனைபேர்? புகலமுடியுமா? அன்பு, இன்பம், அமைதி, அறிவு, ஆற்றல் அனைத்தையும் அளிக்கவல்லது சிவப்புவிளக்கு.

''வருந்திச் சுமை சுமக்கிறவர்களே! என்னிடம் வாருங்கள்'' என்று வருந்தியழைக்கும் வல்லபர்வீற்றிருக்கிறார் அங்கே. சொல்லரிய வரங்களை அள்ளிவீசும் வள்ளல் வாழ்கிறார்; வாழ்விக்கிறார் பாருள்ளோர்மீதுள்ள பேரன்பால் பேழையுள் வதிகின்றார். மன்னர்போற்றிய விண்ணவர்—பார் படைத்த பரமன்— உயிரையே உலகிற்கீந்த உத்தமர் தங்கியிருக்கிறார் சிவப்பு விளக்கிற்கருகே. சிறுவர்நாம் சிந்தையுடன்சென்று சந்திப்போம். அமலன்பாதம் சேர்வோம். அன்பு பெறுவோம். அனைவரும் வாரீர் சிவப்புவிளக்கை நாடி!

**இ. பேர்ணுட்**

## "காவலன்" கோழிமுட்டைக்கு

அதிசயமான பண்டமாற்றம். வாஞ்சை நிறைந்த தொண்டர்களின் தீர்மானம். பண்டிவிரிச்சான் பாலர் சைனியம் சென்றவாரம் செய்த தொண்டு.

"காவலன்" நமது பத்திரிகை. நம் விசுவாச விளக்குக்கு நெய் அது. ஒவ்வொரு வீடுகளிலும் "காவலன்" குடியேற வேண்டும்என்று முளங்கினர் குழந்தைத்



தொண்டர்கள். பிரச்சனை ஒன்றுண்டு. ஏழை மக்களிடம் நோகாதமுறையில் வாராவாரம் "காவலனை" கொடுக்க வேண்டும்—ஒரு **"காவலன்" ஒரு கோழிமுட்டைக்கு.**

**ஆசிரியர் குறிப்பு:** குழந்தைகளின் உள்ளத்தில் உதித்த இந்த எண்ணம் இதை ஏவுதல்என்றுதான் சொல்லவேண்டும். இப்பேர்ப்பட்ட வாஞ்சை நிறைந்த முறைகளை ஏனையவாசகர்களும் அனுட்டித்தால் நல்வாசனை வாழ்க்கைக்கு அமோக வெற்றிவரும்.

## கண்ணீரின் கதை.....

(4-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லுவிக்க மாட்டாயா? மல்லிகா உன்னிடம் அன்புப்பிச்சை கேட்கின்றேன்! தயவுசெய்து உதவி செய்வாயா!.........

**(கணவனின் கவலை மொழிகள்)**

["மனதில்பொங்கும் துயர வெள்ளம்" இவ்வாத்துமாக்கட்கு வடிந்து போகும் நாளேது? அது எம் கையிலுண்டு! அந்நாள் விரைவில் அவர்கட்குக்கிட்ட முயற்சிப்போம்!]

செல்வி ரோஜா சாமுவேல்

எல்லோரும் விரும்பிச்செல்லும் விருந்தினர் மாளிகை

"பாம் கோட்"

பிரதானவீதி, யாழ்ப்பாணம்.

இங்கே உள்ள வசதிகளிற் சில:

● தாராளமான பெரிய அறைகள் ● மின்விசிறிகள்
● றேடியோ சங்கீத உபகரணங்கள் ● சுகதளபாடங்கள்

அறை ஒவ்வொன்றுடனும்

● ஸ்நான சுத்திகரத் தனிஅமைப்புகள்
● உணவுஅருந்த உல்காசமான திறந்த வெளிஇடம்
● மாடி நந்தவனம் ● பூந்தோட்டமுற்றம்

சிறு பிள்ளைகளுக்கு உகந்த

● விளையாட்டு அறைகள் ● சிறு மிருகசாலை
● மோட்டார்வாகனங்கட்கு 'கறாஜ்' வசதி

உல்லாசப் பிரயாணிகளுக்கு உதவியான

● வழிகாட்டிகள் ● போக்குவரவு வசதிகள்

மேல்நாட்டு, கீழ்நாட்டு முறைகளில் தயாரிக்கப்படும்

● திறமையான உணவு

| | தனிஆள் | இருவர் | |
|---|---|---|---|
| 1-ம் வகுப்பு அறை | 10 ரூபா | 18 ரூபா | நாள் ஒன்றுக்கு |
| 2-ம் வகுப்பு அறை | 7 ரூபா 50 சதம் | 15 ரூபா | |

கிரமமாய் வருபவர்களுக்கும், வர்த்தக பிரயாணிகளுக்கும் விசேஷ சலுகைகள் காட்டப்படும்.

விவாகவரவேற்பு, பிரியாவிடை முதலிய வைபவங்களுக்கு உகந்த இடம் இது.

"பாம் கோட்" மண்டபம், வெளிமுற்றம் கொண்டாட்டங்களுக்குப் பெற்றுக்கொள்ளலாம்.

மறவாதீர்கள்:

**விடுதி வசதிகளுக்கும், கொண்டாட்டங்களுக்கும் யாழ்ப்பாணத்தில் கீர்த்திவாய்ந்த இடம்**

**"பாம் கோட்"**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# கண்ணீரின் கதை கேட்டுச் செல்வாய்...

## அன்னையின் ஆகுலக்கண்ணீர்

## அண்ணனின் அவலக்குரல்



## மனைவியின் மன்ருட்டு

## கணவனின் கவலைமொழிகள்

### பெற்றெடுத்துப் பேருமிட்டு வாழவைத்தேனே......!

என் அருமை மகளே! ஐந்து ஆண் மக்களுக்கு அருமையாக, அருந் தவமியற்றிக், கண்ட கண்ட கோவி லெல்லாம் கையெடுத்து, உன்னைப் பெற்றெடுத்தேனே! நீ கேட்டதெல் லாம் இல்லையென்னுது வாங்கி அளித் தேனே! உன்னைப் பள்ளிக்கு வைத் துப் பட்டம் பெறச் செய்தேனே! உனக்கு அழகாக உடையுடுத்தி, உன்னை முன்செல்லவிட்டுப் பின்நின்று அழகு பார்ப்பேனே! மன்மதனுக்கு நிகரான மணமகனை உனக்குத் தேடித் தந்து, நீ கல்யாண கோலத்தில் நின்ற காட்சியைக்கண்டு அன்று நான் மிக மிகப் பெருமிதங் கொண்டேனடி! எனக்கு ஒரு பேரன் பிறந்தபோது என் தேகத்தின் தள்ளாத நிலையைக்கூடப் பாராது உன்னைத் தாங்கித் தாபரித் தேனே! இன்று!.....உத்தரிப்புஸ்தல அனலில் புழுவாய்த்துடி துடிக்கின் றேனே! "அருமையாக வளர்த்த அம்மா!" என்றுகூட நீ நினைத்துப் பார்ப்பதில்லையே! நீ இன்று வாழும் உல்லாசமான வாழ்வுக்கு காரணமாக இருந்த உன் அன்னை நான் பதறித் துடித்து அன்புப்பிச்சை கேட்கிறேன். கண்மணி! இக்கார்த்திகை மாதத்தி லாவது எனக்காகச் சில சிலுவைப் பாதைகளையாவது செய்து ஒப்புக்கொடுக்க மாட்டாயா! இவ்வுத் தரிப்புச் சிறையிலிருந்து என்னை விடுவிக்க மாட்டாயா!

(அன்னையின் ஆகுலக் கண்ணீர்)

### பிரிந்துசென்றதால் உறவும் போனதா......!

என் அன்பரே! அன்று இறை வனின் சந்நிதானத்தில் மாங்கல்யம் சூட்டி என்னை உங்கள் மனைவியாக் கினீர்கள். இன்பமாக வாழ்ந்தோம். அன்றிலிருந்து நான் பிரிந்த நாள் வரை உங்களை என்கண்ணின் மணி யாகப் பாதுகாத்து வந்தேனே! "தாய் முகத்தைப் பார்ப்பாள்; மனைவி மடி யைப் பார்ப்பாள்" என்ற முதுமொழி யைப் பொய்மொழியாக்கினேன். உங் களுக்கு அன்னையாகவும், மனைவியா கவும், மந்திரியாகவும், சேவைசெய்ப வளாகவும் காலத்தைக் கழித்தேனே! காரியாலயத்திலிருந்து நீங்கள் களைப் போடு திரும்பும்வேளை கையில் குளிர் பானத்துடன் வழிமேல் விழிவைத்துக் காத்திருப்பேனே! உங்கள் முகம் வாடினுல் என் மனம் இடிந்துவிடும்! உங்கள் தலையிடித்தால் என் நெஞ்சில் அடித்தது போன்றிருக்கும்! அறு சுவையுண்டி தயாரித்து அருகிலிருந்து நீங்கள் உண்ணும் அழகைப் பார்த்து ரசிப்பேனே! எங்கள் அன்பில் மலர்ந்த என் இரு செல்வங்களையும் உங்கட்கு ஆறுதலாக விட்டு வந்தேனே! நான் பிரிந்துவந்துவிட்டதால் எனது உறவும் அற்றுப்போய் விட்டதா?......எமது மாங்கல்ய இணைப்பும் அறுந்துவிட் டதா?......காலமெல்லாம் உங்கள் காலடியில் சேவை செய்த உங்கள் மனைவியை நினைந்து இந்நாட்களிலா வது சிறு தானதருமம் செய்ய மாட்டீர்களா?.........

(மனைவியின் மன்ருட்டு)

### எந்தன் கேள்விக்குப் பதிலென்ன சொல்லடி......!

என் அருமைத் தங்கையே! எங்கள் பெற்ருேர் எம்மை ஒரு கொடியில் இரு மலர்களாக தவிக்கவிட்டு நெடும் பயணம் சென்றபோது உனக்கு வயது ஏழு! அன்றிலிருந்து உன் வாழ்வே என் குறிக்கோளாக கஷ்டப்பட்டு உழைத்தேன்! கவலையென்ருல் இன்னதென்று அறியாது உன்னை வளர்த்தேன்! நீ பூத்துக் குலுங்கும் பருவப் பெண்ணுய் நின்றபோது மற்றப் பெண்களுக்குச் சலிக்காது உனக்கும் ஆடையணி வாங்கித்தந்து மகிழ்வித் தேன்! கல்யாணப் பருவம் கடந்தும் கூட என் காலடியில் கோடிசீதனத் துடன் குவிந்த அழகுமடந்தையரை யெல்லாம் நான் ஏறிட்டும் பார்த் தேனில்லை! கொஞ்சும் விழிநீரை, ஆண்மை என்ற பெலத்தினுல் அணை போட்டுக் கொண்டே, புன்முறுவலு டன் உன் வாழ்வை வளமாக்கினேன். குணக்குன்ருன ஒரு வரனைப்பொறுக்கி யெடுத்து, மணஞ்செய்வித்து நீ கூறைப்புடவை சரசரக்க வளைய வந்த போது, நானே வாழ்வு பெற்றுவிட் டாற்போல் மெய்மறந்தேன்! இத்தனை செய்துமென்? இன்று அக்கினிப் படுக்கைமேல் அல்லலுறுகின்றேன். நீ பஞ்சணையில் கண்மூடித்துயில்கின்ருய்! நான் படும் வேதனை உனக்குத் தெரி யாதா? தெரிந்தும் தெரியாதவளாக இருக்கிருயே! இந்நாட்களிலாவது மனமிரங்கி சில பூசைப்பலிகளைக் கண்டு எனக்காக ஒப்புக்கொடுக்கமாட் டாயா தங்கையே!.........

(அண்ணனின் அவலக்குரல்)

### அன்று சொன்னது நீதானு......!

என் அன்பு மல்லிகா! அன்று நீ தாய்தந்தையற்ற அநாதையாக தவித்துநின்ருய்! உன் கைகளால் கஷ்டப்பட்டுழைத்து வாழ்ந்த வந்தாய்! ஆதரிப்பாரின்றி, அன்பு காட்டுவாரின்றிக் கண்ணீர் வரைந்த காவியமாக காலம் போக்கிணுய்! உனது துயர நிலையை அறிய நேர்ந்த பொழுது என் பாசத்தை அள்ளிச் சொரிந்தேன் உன்மேல். செல்வக் குமரிகளின் திருமணத் தூதுகளை யெல்லாம் தூசியெனத் துறந்துவிட்டு, உன்னை வாழவைக்க வேண்டும் என்று என் மனைவியாக ஏற்றேன். அழகான பங்களாவில், அடுத்தநேரக் கவலை யின்றி, ஏவல்செய்யப் பணியாளரு டன் உல்லாசமாக வாழவைத்தேன். என்முகத்தைப் பார்த்துவிட்டால் உன் அகத்தின் கவலையெல்லாம் பறந்தோடிவிடும் என்று நீ அன்பு வார்த்தைகளை அள்ளிச் சொரிந்த நாட்கள் எத்தனை? காலமும் மரண மும் எம் அன்பைப் பிரிக்காது என நீ உறுதிமொழிகூறிய நாட்கள் எத்தனை! எத்தனை!! அன்று இவற்றைச் சொன்னது நீ தானு?...... இன்ருே! அக்கினியையே உண்டு, அதனர வணைப்பில் உறங்கி, அல்லும் பகலும் வேதனையால் சாகாமல் சாகிறேன். நான் உன் பிற்கால வாழ்வுக்கென வங்கியில் போட்டுவைத்த பணத்தில் சௌகரியமாக வாழ்கின்ருயே! எனக்காகச் சில பூசைகளையாவது

(தொடர்ச்சி [illegible] பக்கம்)

### கண்ணின் ....,

(3-ம் பக்கத் தொடர்ச்சி)

சொல்லி வேண்டாவெறுப்பாய் ஏனே தானேஎன்று வீண்பொழுது போக்கு கின்றோம். பொறுப்பு யாருடையது? பாடசாலையில் கற்றதின்படி நடக்கின் றனாவெனக் கடுகளவும் கவனிக்கின் ருேமா? ஆசிரியரைச் சந்தித்து மைந் தனைப்பற்றி விசாரிக்கின்ருேமா? முறைப்படுகின்ருேமா? நன்முன்மா திரி காட்டுகின்ருேமா? "ஊழியன் தானியத்தை விதைத்தபின் சத்துராதி வந்து களையை விதைத்துவிட்டான்" எனக் கிறீஸ்துநாதர் வசனித்தது போல் குருமாரும், உபாத்திமாரும் எவ்வளவைத்தான் உபதேசித்தாலும் அக்கறைஅற்ற பெற்ருரும், துட்டதோ ழரும் மாணவரின் ஒழுக்கத்தைக் கெடுத்து நெறிகேட்டுக்குக் காரணர் ஆகவில்லையா?

ஆதலால் அக்கைமாரே, தங்கை மாரே தேவன்நமக்குத் தந்தகுழந்தை களைத் தேவனுக்குப் பிரியப்படத் தேவ அனுசாரத்திலும், சன்மார்க்கநெறியி லும் வளர்த்து, நாட்டுக்கும் நமக்கும் பிறக்கும்பணிசெய்யப்பழகுவோமாக.

— அமலநாயகி

"மரித்தவர்களுக்காகச் செபிப்பது நீதியும், பரிசுத்தமுமான காரியம்."

### அறிவித்தல்

#### கண்டி மேற்றிராசனம்

இலங்கையின் மலைநாட்டுப் பகுதியில் உள்ள விசாரணைப் பங்குகளிலே குருமாராகத் தேவதொண்டு புரிய ஆசிக்கும் வாலிபர்கள் கீழ் காணப்படும் முகவரிக்கு விண்ணப்பம் செய்து கொள்ளவும்.

அதிபர்,
அர்ச். சூசையப்பர் குருமடம்,
பூரணவத்தை,
கண்டி.

● பதுவைநகர் அர்ச். அந்தோனி யாரின் படத்தைக் கொண்டனவாய்ப் புதிய இருபதுவிதமான வங்கிநோட்டு கள் போர்த்துக்கால்தேச வங்கியாலே பாவனைக்கு விடப்பட்டிருக்கின்றன. இத்தாலியதேச பதுவைநகரத்தவ ரென அறியப்பட்டபோதிலும் 13-ம் நூற்ருண்டின் இந்தப்பெரிய அர்ச்சிய சிட்டவர் போர்த்துக்காலின் தலைப்பட் டணமாகிய லிஸ்பன்நகரிலே பிறந்தார்.


## அல்ஸ்ட்ரன்

## மீன்பிடி வலைகள்




அல்ஸ்ட்ரன் மட்டுமே இவ்வனுகூலங்கள் அனைத்தையும் அளிக்கவல்லது.

CIC அல்ஸ்ட்ரனின் விசேஷத் தன்மைகளை மற்ற நார்களுடன் ஒத்திட்டுக் காட்டும் இலவசப் புத்தகம் ஒன்றை பெற இன்றே எமக்கு எழுதுக.

கெமிக்கல் இண்டஸ்ட்ரீஸ் (கொழும்பு) லிமிடெட்,
தபால் பெட்டி 352, கொழும்பு.


Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# பேசும் பேனு

**ஒருமுறை நினைப்போம் :**

அண்மையில் நடைபெற்ற ரயில் விபத்துப்பற்றி எண்ணியெண்ணி வருந்தாதார் எவருமிலர். இந்த விபத்து நடந்த தலத்தைத் தரிசித்தவர்களுள் யானும் ஒருவன். அங்கு யான்கண்ட சோக அனுபவங்கள் பலவருட காலத்துக்கு என் மனதைவிட்டகலாது. இந்த விபத்தில் உயிரிழந்தவர்களுள் பலர் கத்தோலிக்கர்கள். ஆத்துமாக்களின் மாதமான இக்கார்த்திகை மாதத்தில் இந்த ஆன்மாக்களுக்காக ஒருமுறை யாவது வேண்டிக்கொள்வோமாக.

**திரையில் பொதுப்பேரவை :**

வத்திக்கான் பொதுப்பேரவையை அருளப்ப பாப்பரசர் கோலாகலமான வைபவங்களுடன் ஆரம்பித்து வைத்தாரல்லவா? அதைப்பற்றிய 45 நிமிடம் ஓடும் செய்திப்படமொன்றை அண்மையில் பார்வையிட்டேன். இயற்கை வர்ணத்தில் வெகுஅழகாக இப்படத்தைத் தயாரித்திருக்கிறார்கள். இத்தாலியிலும், உரோமையிலுமுள்ள அழகான காட்சிகளுடன் படம் ஆரம்பமாகிறது. உரோமையின் பிரதான தேவாலயங்களைத் தொடர்ந்து காண்கின்றோம். பின்னர் அருளப்ப பாப்பரசர் லொறத்தோ நகருக்குப் புகைரதவண்டியில் செல்லும் பிரயாணம் இடம்பெறுகிறது.

**தேவதாயின் நகர் :**

தேவஅன்னையின் நகரம்என அழைக்கப்படுவது லொறத்தோ நகர். அந்த நகரத்தில் மக்கள் திரள்திரளாகக்கூடிப் பாப்பரசரை வரவேற்கின்றனர். அந்த மக்களின் முகத்தில்தான் எவ்வளவு அக்களிப்பு? பாப்பரசருக்கு மகத்தான வரவேற்பு அளிக்கப்படுகிறது. தேவதாயின் திருச்சுரூபத்தை ஊர்வலமாகக் கொண்டுவருகின்றார்கள். அருளப்பதந்தை தங்கக் கிரீடமொன்றை அன்னையின் சிரசில் சூட்டுகின்றார். என்ன மனோகரமான காட்சி அது.

**ஆயர்களின் வருகை :**

வத்திக்கான் சங்கம். அதற்கு இன்னொரு பெயர் 2,500 ஆயர்களின் பொதுக்கூட்டம். ஆம், அந்தப் பொதுக் கூட்டத்தில் கலந்துகொள்ள விமானங்கள், கப்பல்கள், புகையிரதங்கள், மோட்டார்கள்என்ற பலதரப்பட்ட பிரயாண சாதனங்களும் இந்த 2,500 ஆயர்களையும் உரோமைநகருக்குக் கொண்டு வந்துஇறக்குவது மற்றொரு மகத்தான காட்சி. இந்த ஆயர்களெல்லாம் ஒருவரையொருவர்கண்டு அறிமுகம்செய்து கொள்வதும், தங்கள் காப்பை எனப்படும் மேலங்கிகளைத் தரித்துக்கொள்வதும் மறக்கமுடியாதவை.

**தந்தை வருகிறார் :**

இராயப்பர் மகாலயமுன்றில் சனத்திரளால் நிரம்பிவழிகின்றது. அந்தச் சனத்திரளினூடாக ஆயர்கள் அணிவகுத்து இஸ்பிரீத்துசாந்துவின் கீதத்தை இசைத்துக்கொண்டு செல்கின்றார்கள். பாப்பரசர் அருளப்ப தந்தை சேடியா ஜெஸ்தூரியாஎன்ற தமது ஆசனத்தில் அமர்ந்திருக்க, அவ்வாசனத்தைச் சுமந்தவண்ணம் வருகின்றார்கள் பாப்பரசரின் பரிவாரங்கள். மக்கள் முகத்தில் மகிழ்ச்சி பொங்குகின்றது. தொப்பிகளைக்கழற்றி ஆகாசத்தில் வீசுகிறார்கள். கைலேஞ்சிகளை ஆட்டி அசைக்கிறார்கள். வீவா இல் பாப்பா என்று ஆர்ப்பரிக்கிறார்கள்.

**மகிழ்ச்சிப் புன்னகை :**

பாப்புவின் பரிவாரம் இராயப்பர் மகாலயத்துள் செல்கின்றது. உலக முழுவதிலுமிருந்து வந்துசேர்ந்த ஆயர்களனைவரும் தங்களாசனத்தை விட்டு எழுந்து நின்று பரிசுத்த தந்தையை வரவேற்கின்றனர். அவர்களைக் காணக்காணத் தந்தையின் முகம் மகிழ்ச்சியால் பூரிக்கின்றது. பாப்பரசர் பிரதான பீடத்துக்கு செல்வதுடன் படம்முடிவடைகின்றது. தற்போது கொழும்பு அதிமேற்றிராசனத்தில் இத்திரைப்படத்தை பலவிடங்களிலும் திரையிடப் போகிறார்கள். பதினாறு மில்லிமீற்றர் புரொஜக்டர் இயந்திர வசதியுள்ளவர்கள் இச்செய்திப்படத்தை கொழும்பு அதிமேற்றிராசன அதிகாரிகளிடம் பெற்றுத் தங்கள் இடங்களிலும் திரையிடலாம்.

**நவம்பரில் நாலுநாட்கள் :**

எங்கள் திரைப்படமாளிகைகட்கு வெகுவிரைவில் விஜயம் செய்யவிருக்கும் ஒரு திரைப்படம் நவம்பரில் நாலுநாட்கள். கடந்தவருடம் நவம்பர் மாதம் 22-ந்திகதி அமரர் கென்னடி கொலை செய்யப்பட்டார். 22-ம், 23-ம், 24-ம், 25-ம் திகதிகள் கென்னடியின் சரித்திரத்தில் அமெரிக்க வரலாற்றில் ஏன் உலக நிகழ்ச்சிகளிலேயே மிகமுக்கியமாகி விட்டன. கென்னடி டல்லாசில் சுற்றுப்பிரயாணம் ஆரம்பிப்பது தொடக்கம் அவரது புனிதஉடல் அடக்கம் செய்யப்படுவது வரையுள்ள நிகழ்ச்சிகளைத் தத்ரூபமாகச் சித்திரிக்கும் இத்திரைப்படம் 2 மணித்தியாலங்கள்வரை ஓடுகிறது.

# நாளாம் . . . நாளாம் திருநாளாம்

— நீ. மரியசேவியர் —

மக்கள் பல விதம்; அதேபோல் நாட்களும் பல ரகம். சில நாட்களை நல்லவை என்றும், வேறு சிலவற்றைப் பொல்லாத நாட்கள்என்றும் மக்கள் கணிக்கின்றார்கள். கலியாணம் நடப்பது நல்லநாளில்—வீடுகட்டத்தொடங்குவது நல்லநாளில்—வியாபாரம் தொடங்குவது நல்லநாளில்...



கு
த்
து
வி
ள
க்
கு

நாட்களை நல்லவைகள் என்று கூறுவதில் தவறும் உண்டு; உண்மையும் உண்டு. கடவுள் நாளைப்படைத்தார். நல்லது என்று தான்படைத்தார். ஆனால், அது மக்களுடைய மனதினால்—மனத்தைப் பொறுத்தமட்டில், நல்லது அற்றதாக மாறுகிறது. நாள், நாள் என்ற மட்டில், மனத்திடன், மனப்பண்பு, மன அடக்கம் அற்ற மக்களுக்கு மாத்திரம் நல்ல நாளாகவும் கூடாத நாளாகவும் மாறுகிறது.

இருந்தும், நாட்களில் சில நாட்கள் நல்ல நாட்களாக இருக்கவும்வேண்டும். மக்களைப்பொறுத்தமட்டில் எல்லா நாட்களும் ஒரேவிதமாக இருந்தால், வாழ்வில் சலிப்புத்தோன்றும். சில நாட்கள் திருநாட்களாக இருக்கவேண்டும். அப்போதுதான் மக்கள் அந்த நாட்களில் நடைபெறும் கொண்டாட்டங்களின்மூலம்தங்கள்கொள்கைகளை, பண்பாட்டை, கருத்துக் குவியல்களை வெளியிடலாம், —போற்றி வணங்கலாம். இப்படி, ஆண்டில் பலநாட்கள் விழாநாட்களாக இருக்கின்றன. இந்து சமயமக்கள் கொண்டாடும் "தீபாவளி" என்பதும் இவ்வித சிறப்புவாய்ந்த நாட்களில் ஒன்று.

"தீப்-மாளிகா" (ஒளிகளின் மாலை) என்ற வடசொல்லிலிருந்து தீபாவளி உற்பத்தியானது. தீபாவளி ஒளியின் விழா! நன்மைக்கும் தின்மைக்கும் இடையில் நடக்கும் போரில் நன்மை என்னும் சக்தியே வெற்றிபெறும் என்பதை விளக்க எழுந்த திருநாள்.

நீதிக்கு—உண்மைக்கு—நன்மைக்கு அடையாளமாக ஒளி இருக்கின்றது. அநீதி—தவறு—தின்மைஎன்பவற்றின் சின்னமாக இருள் இருக்கின்றது. நன்மை—தின்மை என்ற இருசக்திகளுக்கும் உள்ள தொடர்பை—வேற்றுமையை—எதிர்ப்பைப்பற்றி மனித அறிவு பழங்காலந்தொட்டுச் சிந்தித்து வந்திருக்கிறது. இந்த ஆராய்ச்சியில் எத்தனை கருத்து வேற்றுமை இருந்தாலும், நன்மையின் சக்தி—ஒளி—கடைசியில் வெற்றி ஈட்டும் என்பது உலக மக்களின் பொதுவான, திடமான நம்பிக்கை. "தீபாவளி" என்ற விழா, இந்த நம்பிக்கைக்கு ஓர் உதாரணம்.

தீபாவளி அன்று எண்ணெய் பூசுவதும், நீரில் குளிப்பதும், புத்தாடை அணிவதும், இல்லத்தில் வெளிச்சம் ஏற்றுவதும் அலங்காரச் சடங்குகள். மனத்தூய்மையைச் சுட்டிக்காட்டி, ஒளிமூலம் நன்மையின் சக்தி வெற்றி பெறும்என்பதை விளக்குகின்றன தீபாவளியின் கொண்டாட்டங்கள். இந்த உண்மையை நிரூபிக்கவேதான் பற்பல கதைகள், "தீபாவளி" எவ்வாறு உற்பத்தியானது என்பதை எடுத்துக்காட்டுகின்றன. இக் கதைகள் கட்டுக்கதைகள். சரித்திரம் ஒப்புக்கொள்ளாத கதைகள்.

ஆனால், சரித்திரம்கூறும் கதை என்று உண்டு. ஒளிக்கும் இருளுக்கும், நன்மைக்கும் தின்மைக்கும்நடந்த போரை, நடந்துவரும்போரை எடுத்துக்கூறுகிறது சரித்திரம். அந்தக் கதைதான் கிறிஸ்துநாதரின் கதை—சரித்திரக் கதை—ஒப்பில்லாத கதை. தீபாவளி கருத்து நிறைந்த நாள். ஆனால், கருமம் அற்றது, உள்ள ஏக்கத்தின் நாள்; ஆக்கத்தின் நாள் அல்ல. உண்மை ஒன்றை விளங்க வைக்க எழுந்த அடையாளநாள்; அந்த உண்மையே கிறிஸ்துநாதரில் உருவாகியதை அறியாதநாள். கிறிஸ்துநாதர் இல்லாத, அவரிடம் இட்டுச் செல்லாத, தீபாவளி தன் இலட்சியத்தையும், அழகையும் இழந்துவிடுகிறது.

# யேசுவின் திரு இருதய சபைக் கூட்டம்

மேற்படிசபையின் மாதாந்தகூட்டம் சென்றமாதம் 25-ந்தேதி யாழ்ப்பாணம், அர்ச். ஞானப்பிரகாசியார் சாலையில் நடைபெற்றது. கூட்டத்திற்கு திரு. ரி. ஜே. சவுந்தரநாயகம் தலைமை தாங்கினார். கூட்டஆரம்பத்தில் திரு. எஸ். எம். ஜே. லூயிஸ் காலஞ்சென்ற அதிவண. பீற்றர்பிள்ளை சுவாமியாரின் மறைவையிட்டுக் கூட்டத்தாரின் அனுதாபத்தைத் தெரிவித்தார். திரு. ஜே. ஏ. வி. சில்வேஸ்தர் இதை ஆமோதித்தார்.

அதன்மேல், வண. பி.வில்லியம் யேசுதாசன், ஓ. எம். ஐ. சுவாமியவர்கள் ஞானஉபதேசத் திட்டத்தைப்பற்றிச் செய்த உபந்நியாசத்தில்: 1-வது அத்திட்டத்தின் மையமானஉண்மை திரிஏகசருவேசுரன் நம்மில்கொண்ட நேசத்தினால் தம்முடைய ஆனந்தம் நிறைந்த நித்தியசீவியத்தை நமக்குச் செலுத்தச் சித்தமானார் என்பதேஎன்றும், அந்த உண்மையை நமதுபிள்ளைகள் தங்கள் கத்தோலிக்க வேதப்படிப்பிற்கும், அனுசரிப்பிற்கும் மையமாக வைத்து, மூன்று தேவஆட்களையும் வெகுவாக நேசித்து அவர்களுடைய நித்தியசீவியத்தில் பங்குபற்ற ஆசைப்படாவிட்டால், கத்தோலிக்க வேதத்தின் இயல்பையே இழந்துவிடுவார்கள் என்றும் தெளிவாகக் காட்டினார்.

2-வது மூன்றுதேவஆட்கள் அப்போஸ்தலரின் விசுவாசப் பிரமாணத்திலும், வேதாகமத்திலும், திருச்சபை வருஷத்திலும் விபரிக்கப்பட்டிருக்கும் ஒன்பது தேவகிரியைகளை நமக்கு நித்திய சீவியத்தைச் செலுத்துவதற்குப் பாவிக்கிறார்கள் என்றும், இக்கிரியைகளை ஞானஉபதேசத் திட்டத்தின் கோர்வையாக அமைத்துவிட்டால் நமது பிள்ளைகளுடைய வேதப்படிப்பில் மாத்திரமல்ல, அவர்களுடைய ஞானச்சீவியத்திலும் ஏகத்துவமும், இணக்கமும் உண்டாகும் என்றும் விபரித்தார்.

3-வது ஞானஉபதேசத்தின் மற்றப் பகுதிகள் நித்தியசீவியத்தின் தேவ அறிவு, தேவபரிசுத்தம், தேவதரிசனை என்னும் [illegible] நமக்குச் செலுத்துவதற்கு ஒன்பது தேவகிரியைகள் பாவிக்கிற அத்தாட்சிகள் கருவிகள் சம்பவங்களாய் இருக்கின்றன என்றும், அவைகளைத் தேவகிரியைகளோடு மூன்று படிகளைச்சுற்றிப் பொருத்திவிட்டால், நமது பிள்ளைகள் அந்த மூன்று படிகளே தாங்கள் யாவற்றையும்விற்று வாங்கவேண்டிய விலையேறப்பெற்ற முத்துஎன இலேசாக உணருவார்கள் என்றும் விப்ரமாகக் காட்டினார்.

## தம்பதிகளும் சங்கத்திற்கு

— உரோமை.

மெய்விவாகத்தைப்பற்றிப் பொதுச்சங்கத்தில் விவாதிக்கப்படும்போது தம்பதிகளும் அழைக்கப்படவேண்டும் என்று இந்திய மேற்றிராணியார் சங்கத்தில் கூறினர். "இதனால் மெய்விவாகம் என்னும் தேவதிரவிய அனுமானத்திற்கு உள்ள மகிமையை பொதுச்சங்கம் எடுத்துக் காட்டுவதாகும். மேலும் குடும்பத்தினர் அப்போஸ்தலத்துவ வேலைக்கு சிறப்பான இடம் வகிக்கிறார்கள் என்பதையும் தெளிவாக்கலாம்" என்றார் அந்த மேற்றிராணியார்.

## அமெரிக்க தலை......

(1-ம் பக்கத் தொடர்ச்சி)

"எனது வெற்றி காலஞ்சென்ற கென்னடிக்கு செலுத்தப்பட்ட அஞ்சலி" என்று திரு. ஜோன்ஸன் மேலும் கூறினர். எவ்வளவு உண்மை. மனிதப்பண்பு நிறைந்த கிறிஸ்துவ பண்பாட்டை திடசங்கற்பத்துடன்நடைமுறைக்குக்கொண்டு வந்தார் கென்னடி. உலகம் முழுவதும் அவர் முறைகளைப் பாராட்டினது. எல்லோரும் கடவுள் மக்கள் என்பதை நிலைநாட்ட கெம்பீரமாய் உழைத்து தியாகவீரனாய் மறைந்தார். ஜனாதிபதி ஜோன்சனின் வெற்றி கென்னடி மறையவில்லை—வாழ்கிறார் என்பதற்கு ஓர் அத்தாட்சி.

● லெயோனா மொடல்என்ற 14 வயதுடைய கலிபோனியபெண்பிள்ளை ஆங்கிலகால்வாயை நீந்திக்கடக்குமாறு விமானமூலம் அன்றுபுதன்கிழமை லண்டன்நகர்போய்ச் சேர்ந்திருக்கிறாள். இதற்குமுன் அதிகம்இளவயதினளாகச்சென்றவருடம்17வயதுடைய குளோடியா மைக்பேர்ஸன்என்றபெண்மணி 17மணித்தியாலத்திற்குச் சற்றேகூடியநேரத்தில் ஆங்கிலகால்வாயை நீந்திக்கடந்திருக்கிறாள்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

## பாப்பரசரது பம்பாய் விஜயத்துக்கு அவரது 3 நிபந்தனைகள்

6-வது சின்னப்ப பாப்பரசர் பம்பாய்நகர சற்பிரசாத மகாநாட்டுக்கு விஜயம்செய்வது பற்றி தமது விருப்பங்களைத் தெரிவித்து இருக்கின்ருர். இவ்விஜயம் ஒரு திருயாத்திரையாக இருக்கின்றது. ஆகவே எளிமையும் தூய்மையும் அடிப்படியாகக் கொண்டிருப்பதே தகுதியாகும். கருதினல் கிருசியாஸ் அவர்கள் பாப்பரசர் இதுபற்றி விரும்புவதை அறிவித்திருக்கிருர். அவை:

1. கொண்டாட்டங்கள் யாவும், மகாத்மாகாந்தி உயிருடன் இருப்பின் அவர் விரும்பத்தக்க எளிமை உடையனவாய் இருக்க வேண்டும்.
2. இந்தியாவின் பாரம்பரிய போக்கின் தன்மையில் இத் திருயாத்திரை அமைய வேண்டும்.
3. இந்தியாவின் ஏழைகளை—வறியவர்களை திருயாத்திரையின்போது அறிய வரவேண்டும்.

## படித்த பெண்!

பார்பரா வாட் (Barbara Ward) என்ற ஆங்கிலேயபெண் பொதுச்சங்கத்தில் பேசுவாள் என நம்பப்படுகிறது. இவள் ஓர் சிறந்த அறிவாளி. ஓர் ஆங்கில பத்திரிகைக்கு ஆசிரியராய் இருந்தவள். பி. பி. சி. (B.B.C.) லண்டன் வானெலியில் அதிபராகவும் கடமையாற்றியவள்.

## இன்னெரு பயணமா?

முன்னெருபோதும் எப்பாப்பரசரும் சென்றிராத தூரபிரதேசங்களுக்குப் பிரயாணம் செல்லும் ஆர்வமுடையவர் நமது தந்தை 6-வது சின்னப்பபாப்பரசர். ஏற்கனவே ஜெருசலேம் பிரதேசம் இவ்வருடத் தொடக்கத்தில் சென்றிருந்தார். இவ்வருட முடிவில் இந்தியாவர இருக்கிருர். அடுத்தவருடத்தில் பிலிப்பையின் பிரதேசத்தில் ஆசியாக்கண்டத்தில் வேதபோதக4-ம்நூற்ருண்டு முடிவுவிழா அங்கு கொண்டாடப்படும் தினத்தில் சமுகம் அளிப்பாரா என்று பலரும் கேட்டுக் கொள்கின்றனர்.

# செய்யமுடியாதா? என்ன!

பம்பாயில் நடக்கப்போகும்சர்வதேச சற்பிரசாத மகாநாடு கத்தோலிக்க மக்களுக்கு பூசிதமானது. பம்பாய்க்குச்சென்று அதில் பரிசுத்த பாப்பரசரைக்கண்டு அவருடைய அப்போஸ்தலிக்க ஆசீர்வாதத்தை நேரில் பெறுவதென்ருல் அப்பாக்கியம் ஒப்புவமை அற்றதாகும். இலங்கைவாழ் மக்களுக்கு வருங்காலத்தில் இந்த வாய்ப்பு இவ்வளவு கிட்டிய முறையில் கிடைக்குமோ என்பது சந்தேகம்.

இலங்கையிலிருந்து ஏறஇறங்க மூவாயிரம்பேர் யாத்திரிகர்களாகப் பம்பாய்க்குச்செல்ல சர்க்காரிடம் விண்ணப்பித்திருக்கிருர்களாம். இந்த விண்ணப்பங்களுக்குச் சக்கார் நிதி திண்டாட்டத்தின் காரணமாக உத்தரவு கொடுக்க மறுத்திருப்பதாக ஒரு வதந்தி கிட்டியது. நிதிமந்திரி இதையிட்டுத் தாம் மனவருத்தம் அடைவதாகவும், கத்தோலிக்க மக்களுக்கு இந்தப் பாக்கியமான சந்தர்ப்பத்தில் நமது நாட்டின் நிதிப்பிரச்சினை இடறலாய் வந்துள்ளதென்றும் தெரிவித்திருப்பதாகக் கூறப்படுகிறது.

நாட்டின் நிதிநிலை மிகவும்கஷ்டமானது தெளிவு. எனவே, எல்லோருக்கும் முன்மாதிரிகையாகக் கிறிஸ்தவ மக்கள் நாட்டில் உள்ள அவலநிலையைச்சமாளிக்க சர்க்காருக்குஉதவியளிக்கத்தான் வேண்டும்

என்ருலும் நிலையைச்சமாளிக்க ஏதோ ஓர் உபாயம் அரசாங்கம் தேடி, கிறிஸ்தவர்களுக்கு இந்த வாய்ப்பைக் கொடுக்கவேண்டும் என்றுதான் நாம் கூறுகிருேம். நீதியின்படி செய்யவேண்டும் என்று இன்றையநிலையில் நாம் கேட்கமுடியாது. ஆனல், எத்தனையோ பிரச்சனைகளுக்குத் தீர்ப்புக்காணும் சக்கார் இலங்கைக் கிறிஸ்தவ சமுதாயத்திற்கு இந்தச் சலுகையைச் செய்யமுடியாதா—என்ன ?

## இப்படியும் நடந்தது

### அடாது செய்பவர்.......

"விருந்து வேண்டாம், கஞ்சிவேண்டாம், ஞானமுறையில் திருநாள் கொண்டாடினல் போதும்......... பழையன கடத்தல், புதியன புகுத்தல்......" என்றேன் பிரசங்கத்தில். கேட்டதும் பரபரப்பு. இரவு நேரம் நோவினைப் பிரசங்கம் உறைப்பாய் இருக்கவில்லை. என்ருலும் "விருந்து" என்று சொன்னதும் அதைக் கேட்டவர்கள் தூங்கும் கண்களை அகல முழித்து வெட்டினர்கள். "அதுதான் சரி" என்றதுபோல் சிலர் தலையாட்டினர். செய்கிறதை சுவாமி செய்யட்டும் என்று சகிப்பு மனப்பான்மை தெரிவித்தன சிலமுகங்கள். இந்தமுறை நோவினைக்காசு கொடுக்கமாட்டோம் என்ற வெப்பம் அள்ளிவீசியது சிலர் முகத்தில். இல்லை கஞ்சி காய்ச்சியே தீருவோம்; விருந்துபோட்டே ஆகவேண்டும், என்றதுபோல் சிலர் வெந்துகொண்டிருந்தனர்.

நவநாள் முடிந்தது. திருநாள் காலை பூசையும், ஊர்வலமும் சிறப்பாக சீராக நடந்தேறியன. தடல்புடலான ஆயத்தம் விருந்துக்கு நடந்தது, எங்கிருந்தோ, தெரியவில்லை பெட்டி பெட்டியாக சோறு, சட்டி சட்டியாக கறிகள், வலு விறு விறுப்புடன் கொண்டுவரப்பட்டன. கோயில் முற்ற வெளியில் சட்டமறுப்பா? அல்லது குழந்தைப்பிள்ளைத்தனமா? நான் நடக்கிறது நடக்கட்டும் என்று என் பாட்டில் இருந்தேன். சண்டிக்கட்டு அவிட்டுக்கொண்டு, வேர்த்தொழுக கட்டளைகாரரில் ஒருவர் ஓடிவந்தார். "சுவாமி சோர்....ஆசீர்..." கொன்னை தட்டினர். நாக்கு தளம்பினதற்குக் காரணம், "பசிஉண்டாக்கும் மருந்து." இவ்வேளை நான் கோபத்திற்கு இடங்கொடுத்தல் பிழையெனக் கருதினேன். ஏதோவிதமாகச் சுளிக்கவேணும். "இந்தக் காலத்தில் நீங்களும் ஆசீர்வதிக்கலாம். காலைத்திருநாள் பூசையில் எல்லாம் ஆசீர்வதிக்கப்பட்டது" என்று பதிந்தகுரலில் சமாளித்தேன்.

முறுமுறுப்புடன் சென்ருர். சில நிமிஷங்களில் கோபங்கொண்டு சீறுவாரும், கக்களங்கட்டிச் சிரிப்பாரும், வாயில் வைத்த சோற்றை காறிக் காறித் துப்புவாரும், சோற்றை பொட்டணியில் கட்டியவர் அவிழ்த்து மணந்து வீசுவாருமாய் ஒரே குளப்பமாய் கோயில்முற்றவெளி இருந்தது.

சில பெண்பிள்ளைகள் சிரித்துக் கொண்டு ஓடிவந்தார்கள். "சுவாமி சுவாமி, சங்கிடுத்தாம் சோறு ஆசீர்வதித்தாராம், வெறியில் ஆசீருக்குப் பதிலாகப் போத்தலைமாறி லாம்பெண்ணையை ஊத்திவிட்டார். புதியன புகுத்தல்...லாம்பெண்ணை ஊத்தல்...

[ஒரு குருவின்வாழ்வில் ஐந்து வருஷங்களுக்கு முன் ஒரு சிறியகிராமத்தில் நடந்த சம்பவம்]

## உரிமையோடு கடமை

கிறிஸ்தவ இளம் தொழிலாளரின் சங்க மகாநாடு கொழும்பில் சென்றமாதம்25-ம்திகதிகிறிஸ்து இராசா திருநாளன்று கூடியது. தொழிலாளருக்குச் செய்த பிரசங்கத்தில் கொழும்புத் துணை மேற்றிராணியார் முதலாளிமார் தொழிலாளிகளுடைய கடமைகளைச் சுருங்கக்கூறி இன்றுவரை இருவர்க்கத்தினரும் தத்தம் உரிமைகளில் மாத்திரம் விழிப்பாக இருந்தொழிய கடமைகளில் சிந்தனை அதிகம் செலுத்தாததே இன்றைய உலகின் சீர்கேடான நிலைமைக்குக் காரணமென்ருர்.

## என்ன தியாகம்!

புதிதாகப் பட்டம்பெற்ற பிலிப் மூசோபாளன்னும் ஓர் இளம் குருவானவர் 71வயதுநிரம்பிய பயராட் என்னும் மேற்றிராணியாரைக் காப்பாற்றியபோது சில புரட்சிப் போர்வீரர்களால் தாக்கப்பட்டு அறிவின்றிக் கிடந்தார்.

இச்சம்பவத்தை மேற்றிராணியார் ரோமாபுரிக்கு வந்தபொழுது தம்மைச் சில ஆபிரிக்கர்களும், அவ்விளங் குருவானவரும், ஒரு புரட்சி உத்தியோகஸ்தரும் காப்காற்றினர்கள் என்று கூறினர்.

## சைவ முஸ்லீம் பிரமுகர்கள்......

பம்பாய் சர்வதேச சற்பிரசாத மகாநாட்டிற்கு ஒத்துழைக்க வேண்டுமென்றும், உலகத்தின் எல்லாப் பாகங்களிலும் இருந்து வரும் யாத்திரிகர்கள், பிரதிநிதிகளுக்கு சகல உதவியும் அளிக்க வேண்டுமென்றும் கலேகார் எனப்படும் சைவப் பெரியாரும், சர்ரு கின்ரூலா எனப்படும் முஸ்லீம் பிரமுகரும் பொதுச் சனங்களுக்கு ஓர் வேண்டுகோள் விடுத்திருக்கிறர்கள்.

"பல்லாண்டுகளாக இந்தியாவில் பல்வேறு சமயங்கள், அன்பாதரவாய் வாழ்ந்து வந்திருக்கின்றன. நமது ரோமான் கத்தோலிக்க சகோதரர்களோடு நாமும் பொறுப்பெடுத்து இந்த மகத்தான வைபவத்தை சிறப்பிக்க வேண்டும்" என்று இவர்கள் கூறினர்கள்.

திரு. கலேகார் காந்திஜியின் சீஷரில் ஒருவர்.

# நாடுகளின் சமாதான உறவு

சமாதானம், ஐக்கியம், பரஸ்பர அன்பு, சமரச மனப்பான்மை, சமத்துவம், சகோரத்துவம் இவை எல்லாம் கடவுளின் கொடைகள்; கடவுளின் ஆசீர்வாதம். "சமாதானம் பண்ணுகிறவர்கள் பாக்கியவான்கள்; அவர்கள் தேவமக்கள்." இவை கிறிஸ்துவின் பொன்மொழிகள்.

காலாதிகாலமாகப் பல மனநோவுகளை இலங்கை—இந்திய பிரச்சினைஉண்டாக்கியது. இருபக்கத்திலும் தாங்கொணு மனத்தாங்கல்கள். ஏழைகள் பட்டதுயரமோ கணக்கற்றவை. இன்னல்கள், தொல்லைகள்மலைபோல் வளர்ந்தன. எரிமலைபோல் பொங்கிவரும் பிரச்சினை எப்போதீரும் என்று எதிர்பார்த்திருந்தது அனைத்துலகும்.

காய்ந்த கடும் வெப்பத்தால் வரண்ட நிலத்தில் சரமாரி பொழிந்ததுபோல் கடவுளின் ஆசீர்வாதம் இறங்கினது. மாபெரும் பிரச்சினை பெரும்பாலும் தீர்ந்தது. சமரசமுறையில் சமாதான வழியில் நமது பிரதமர் ஸ்ரீமாவோ பண்டார நாயக்கா, இந்திய பிரதமர் லால்பகதூர் சாஸ்திரி இவர்கள் இருவரும் பெருந்தன்மையுடன் இப்பிரச்சினைக்கு முற்றுப்புள்ளி இட்டனர். முதன்முதலாக இறைவனுக்கு நமது தாழ்மையான நன்றியைச் செலுத்துவோம். அடுத்து இவர்கள் இருவருக்கும் இவர்களது குழுவுக்கும் நமது பாராட்டுக்கள். மனிதப் பண்புள்ளமுறையில் இப்பிரச்சினை தீர்க்கப்பட்டதை நினைத்து நமது உள்ளம் பூரிப்படைகிறது. நமது கிட்டிய அயல்நாடு—இந்தியாவுடன் நமது நாடு ஐக்கிய உறவில் வளர இறைவனை வேண்டுகின்ருேம். நாடுகளின் சமாதான உறவு உலக மக்களின் பேரானந்தம்.

இந்த மனிதப்பண்புள்ள முறையில் நமது நாட்டில் உள்ள மற்றும் பிரச்சினைகள்தீர இறை அருள் தேவை. குறைகூறி முறையிடுவதை விட்டுச் செபதபத்தினல் ஆட்சிப்பீடத்தின் மேல் இறை அருள் இறங்க இறைவனை இரந்துகேட்போம்.

இப்பத்திரிகை யாழ்ப்பாணம், 20 இலக்க, 5-ம் குறுக்குத்தெருவில் வதியும் திரு நீக்கிலஸ் ஜேம்ஸ் அவர்களால் உரிமையாளருக்காக அர்ச். சூசைமாமுனிவர் அச்சகத்தில் 1964-ம் ஆண்டு கார்த்திகை மாதம் 7-ந் திகதி சனிக்கிழமை அச்சிடப்பெற்று வெளியிடப் பட்டது.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org